**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)**

ஆணை எண்: 204 /பேரூ/2022
நாள்: 06.12.2022

திரு.R. மயில்சாமி,
மதுரை. ... முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
பரவை தேர்வுநிலைபேரூராட்சி,
மதுரை மாவட்டம். ... எதிர்மனுதாரர்

மதுரை மாவட்டம், புதுவிளாங்குடி,செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, பிளாட் எண்.5ல் வசிக்கும் திரு. R. மயில்சாமி என்பவரின் 19.10.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 20.10.2022-ல் பெறப்பட்டு 204/பேரூ/2022 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

மதுரை மாவட்டம், புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, பிளாட் எண்.5ல் வசிக்கும் திரு. R. மயில்சாமி என்பவர் தனது முறையீட்டு மனுவில், கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:

" பரவை தேசிய நெடுஞ்சாலையில் உள்ள ஸ்ரீவிநாயகா வாட்டர் சப்ளையர்ஸ் நிறுவனம் இராட்சத மின் மோட்டார் மூலம் நிலத்தடி நீரை உறிஞ்சி, பத்து டயர் லாரிகள் மூலம் மதுரை மாநகர் மற்றும் புறநகர் பகுதிகளில் கட்டுமான கட்டிடங்களுக்கு தேவைப்படும் தண்ணீர் விற்பனை செய்து வருவதுடன், தண்ணீர் சுத்திகரிப்பு நிலையம் (தொழிற்சாலை) வைத்து ஒரு நாளைக்கு பல லட்சம் லிட்டர் தண்ணீர் விற்பனை செய்து வருகிறார்கள். நிலத்தடி நீரைஉறிஞ்சி தண்ணீரை விற்பனை செய்து வருவதினால் நிலத்தடி நீர் குறைந்து பரவை பேரூராட்சி வாழ் மக்களுக்கு குடிநீர் தட்டுப்பாடு பெரிய அளவில் உள்ளது நிலத்தடி நீரை இராட்சத மின் மோட்டார் மூலம்

உறிஞ்சி எடுத்து விற்பனை செய்வதற்கு சுத்திரிகரிப்பு நிலையம் (தொழிற்சாலை) செயல்படுவதற்கு முறையான அனுமதியை பரவை பேரூராட்சியில் இருந்து பெறவில்லை. ஸ்ரீவிநாயகா வாட்டர் சப்ரையர்ஸ் கட்டிடம் கட்டிட அனுமதியை விட கூடுதலாக சட்டத்துக்கு புறம்பாக கட்டப்பட்டுள்ளது. மேலும் இக்கட்டிடத்திற்கு அளவீட்டை குறைத்து, சொத்துவரி செலுத்தியும் தொழில்வரி குறைவாக செலுத்தி வருவதினால், பரவை தேர்வுநிலை பேரூராட்சிக்கு பெருத்த வருவாய் இழப்பு ஏற்பட்டு வருகிறது. மேலும் இங்கு பணிபுரியும் தொழிலாளர்களுக்கான தொழில்வரி முறையாக செலுத்துவதில்லை.

ஸ்ரீவிநாயகா வாட்டர் சப்ளையர்ஸ் நிறுவன கட்டிடம் பொது மக்கள் பயன்படும் மற்றும் தொழிலாளர்கள் வேலை செய்யும் கட்டிடம் என்பதால், தமிழ்நாடு பொது கட்டிடங்கள்(உரிமம்) சட்டம் 1965 பிரிவு 2(8)–ன்படி முறையாக உரிமம் பெற்று முறைபடி அவ்வப்போது புதுப்பிப்பது அவசியமாகும். ஆனால் உரிமம் பெறாமல் நிறுவனத்தை சட்ட விரோதமாக நடத்தி வருகிறார்கள்.

மேலும் பொதுமக்கள் பயன்பாட்டிற்கான கட்டிடம் என்பதால் 1973ம் ஆண்டைய தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் பிரிவு 33–ன்படி ஸ்ரீவிநாயகா வாட்டர்ஸ் சப்ளையர்ஸ் கட்டிடத்திற்கு நகர் மற்றும் ஊரமைப்பு திட்ட இயக்கத்தால் (Directorate of Town and Country planning)படி ஒப்புதல் பெற வேண்டும், ஆனால் மேற்படி நிறுவனம் முறையான அனுமதி பெறவில்லை.

எனவே முறையாக உரிய துறைகளின் அனுமதி பெறாமல் சட்டத்திற்கு புறம்பாக கட்டிடம் கட்டியும், தண்ணீர் விற்பனை செய்யும் ஸ்ரீவிநாயகா வாட்டர் சப்ளையர்ஸ் நிறுவனத்தை உடனடியாக நகர் ஊரமைப்பு சட்டம் 1971–பிரிவுகள் 56 மற்றும் 57கீழ் கட்டட வளாகத்தை பூட்டியும் மற்றும் முத்திரையிட்டும் (Lock and seal) விரைவான நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்."

**முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான விரிவான அறிக்கையை அனுப்பக்கோரி பரவை தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலருக்கு இம்முறைமன்ற நடுவ 08.11.2022 நாளிட்ட கடிதம் அனுப்பப்பட்டது.**

**மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர் இம்முறைமன்ற நடுவ அழைப்பாணைகள் மூலம் 22.11.2022 அன்று நேரடி விசாரணைக்கு அழைக்கப்பட்டனர்.**

**மனுதாரர் 22.11.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.**

மதுரை மாவட்டம், பரவை தேசிய நெடுஞ்சாலையில் உள்ள ஸ்ரீவிநாயகா வாட்டர் சப்ளையர்ஸ் நிறுவனம் பெரிய பெரிய மின் மோட்டார்கள் மூலம் நிலத்தடி நீரை எடுத்து வாரிகள் மூலம் கட்டுமானங்களை மேற்கொள்ளும் கட்டடங்களுக்கு தண்ணீரை விற்பனை செய்கிறது. நிலத்தடி நீரை எடுப்பதற்கு பேரூராட்சியிடமிருந்து அந்நிறுவனம் முறையாக அனுமதி பெறவில்லை. மேற்கண்ட நிறுவனம் சட்டத்திற்கு புறம்பாக லட்சக் கணக்கான லிட்டர் நிலத்தடி நீரை எடுத்து சட்ட விரோதமாக விற்பனை செய்வது குறித்து பேரூராட்சிக்கு பலமுறை புகார்கள் அனுப்பியும் எவ்வித நடவடிக்கையும் பேரூராட்சியால் எடுக்கப்படவில்லை. மேலும் மேற்கண்ட ஸ்ரீ விநாயகா வாட்டர் சப்ளையர்ஸ் நிறுவன கட்டடம் கட்டட அனுமதியை விட கூடுதலாக சட்டத்திற்கு புறம்பாக கட்டப்பட்டுள்ளது. அந்நிறுவனத்தின் உரிமம் முறையாக புதுப்பிக்கப்படுவதில்லை. மேலும், அந்நிறுவனத்திற்கு சொத்து வரியும் பேரூராட்சியால் குறைவாகவே விதிக்கப்பட்டுள்ளன. இது குறித்தும் பேரூராட்சிக்கு புகார் அனுப்பியும்

பேரூராட்சியால் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. எனவே உரிய அனுமதி பெறாமல் நிலத்தடி நீரை எடுத்து அந்நிறுவனம் தனியார் கட்டுமான நிறுவனங்களுக்கு விற்பனை செய்வதை தடுத்திடவும், மேற்படி நிறுவனம் பொது கட்டடம் என்பதால், தமிழ்நாடு பொது கட்டடம் (உரிமம்) 1965 பிரிவு 2 (8)ன்படி மற்றும் நகரமைப்பு சட்டம் 1971 பிரிவு 56 மற்றும் 57ன்படி நடவடிக்கை எடுத்திடவும் கட்டட அனுமதியை மீறி கட்டப்பட்டுள்ள மேற்கண்ட வாா்ட்டர் சப்ளை நிறுவனத்தின் கட்டடத்தை Lock and Seal செய்திடவும் தேவையான நடவடிக்கை எடுக்கும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன். இந்நேர்வு தொடர்பான புகைப்படங்களையும் இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன் என தெரிவித்துள்ளார்.

**பரவை தேர்வுநிலை பேரூராட்சியின் செயல் அலுவலர் 22.11.2022 அன்று நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்தார் :**

"மதுரை மாவட்டம் பரவை தேசிய நெடுஞ்சாலையில் உள்ள ஸ்ரீவிநாயகா வாட்டர் சப்ளையர்ஸ் நிறுவன கட்டடத்திற்கு முறையான வரைபட அனுமதி பெறப்படவில்லை. மேலும் அந்நிறுவனத்திற்கான சொத்துவரி மற்றும் அங்கு பணியாற்றும் பணியாளர்களுக்கான தொழில் வரியும் பேரூராட்சியால் இதுவரை பெறப்படவில்லை. மேற்கண்ட கட்டடத்திற்குள் இராட்சத போர்வெல் அமைத்து நிலத்தடி நீர் உறிஞ்சப்பட்டு தனியார் நிறுவனங்களுக்கு விற்பனை செய்யப்பட்டு வருவது குறித்த புகாரின் மீது நடவடிக்கை எடுத்து, அந்நிறுவனத்தின் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறோம். மேலும், அந்நிறுவனத்திடமிருந்து முன்தேதி கணக்கிட்டு நிலுவையில் உள்ள சொத்து வரி மற்றும் தொழில் வரி தற்போது வரை கணக்கீடு செய்து வசூலிக்கப்படும் என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறோம்.மேலும் இம்முறை மன்றத்தில் செயல் அலுவலரான என்னால் சமர்ப்பிக்கப்படும் எனது 21.11.2022 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எங்களது மேல் வாக்கு மூலமாக பதிவு செய்து கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக் கொள்கிறோம்" என தெரிவித்துள்ளார்.

**பரவை பேரூராட்சி செயல் அலுவலர் தனது 21.11.2022 நாளிட்ட அறிக்கையில் கீழ்கண்டவாறு விவரங்களை தெரிவித்துள்ளார்.**

பரவை தேர்வுநிலை பேரூராட்சி மெயின் ரோட்டில் அமைந்துள்ள ஸ்ரீவிநாயகா வாட்டர் சப்ளையர்ஸ் நிறுவனம் முறையான அனுமதியின்றி இராட்சத மின்மோட்டார் மூலம் நிலத்தை நீரை உறிஞ்சி லாரிகள் மூலம் விற்பனை செய்வதாகவும், மேற்படி நிறுவனம் கட்டிட அனுமதியை காட்டிலும் கூடுதலாக சட்டத்திற்கு புறம்பாக கட்டியுள்ளதாகவும் (Directorate of Town and Country Planning) முறையாக உரிமம் பெறாமலும் புதுப்பித்தல் உரிமம் பெறாமலும் நடைபெறுவதால் இந்நிறுவனத்தை ஊரமைப்பு சட்டம் 1971 படி பிரிவு 56 மற்றும் 57ன் கீழ் கட்டிட வளாகத்தை பூட்டியும் மற்றும் முத்திரையிட்டும் ( Lock and seal) நடவடிக்கை எடுக்குமாறு புகார் மனு அளித்துள்ளார். அதன்படி, திரு. ஆர். மயில்சாமி என்பவரது புகார் மனு மீதான எனது அறிக்கையினை கீழ்க்கண்டவாறு பணிவுடன் சமர்ப்பித்துக் கொள்கிறேன்.

திரு. து.அன்புச்செல்வன் என்பவர் ஸ்ரீ விநாயகா வாட்டர் சப்ளை என்ற நிறுவனத்திற்கு இப்பேரூராட்சியில் கட்டிட வரைபட அனுமதி தரைத்தளத்திற்கு மட்டும் பெற்றுள்ளார். கட்டிட வரைபட எண். 6/2016–17 நாள் 18.04.2016 ஆகும். இவருக்கு 2017–18ல் சொத்துவரி வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது. வரிவிதிப்பு எண். 2870 கதவு

எண். 13.1.66 மெயின் ரோடு. இந்த முகவரியில் ஸ்ரீ விநாயகா வாட்டர் சப்ளை தொழில் செய்து வருகிறார். இது சம்பந்தமாக 13.08.2020ல் பொதுப்பணித்துறையின் மூலம் கடித எண்.டிடி(ஜி)ஒடி 10/ஜி 6/222/ Fresh Noc-Madurai/ 2020 நாள் 13.08.2020 அனுமதி பெற்றுள்ளார்.

விநாயகா வாட்டர் சப்ளை நிறுவனத்திற்கு தரைத்தளத்திற்கு மட்டும் விரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது. முதல் தளத்திற்கு கட்டிட அனுமதி பெறப்படவில்லை. 2022–23ம் ஆண்டு சொத்துவரி சீராய்வு கணக்கெடுப்பின்படி முதல்மாடி வரி நிர்யணம் செய்யப்பட வேண்டும் என நோட்டீஸ் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், கூடுதல் கட்டிடத்திற்கு வணிக ரீதியாக இருப்பதால், சம்பந்தப்பட்ட நிறுவனம் (DTCP) நகர் ஊரமைப்பு இயக்குநரின் அனுமதி பெற்று பிறகு பழைய தேதியில் இருந்து வரி நிர்ணயம் செய்யப்படும். எனவே திரு. ஆர். மயில்சாமி என்பவரது புகார்மனுவின் மீது மேற்காணும் விபரப்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்ற விபரத்தினை தெரிவித்துள்ளார்.

**மனுதாரரின் மனு வாக்குமூலம், எதிர்மனுதாரர்களான பரவை பேரூராட்சியின் செயல் அலுவலர் ஆகியோர்களின் வாக்குமூலம் அறிக்கையினை அடிப்படையில் கீழ்க்கண்ட விபரங்கள் கண்டறியப்பட்டன.**

மதுரை மாவட்டம், பரவை தேசிய நெடுஞ்சாலையில் உள்ள ஸ்ரீவிநாயக வாட்டர் சப்ளையர்ஸ் நிறுவனம் இராட்சத மின்மோட்டார் மூலம் நிலத்தடி நீரை உறிஞ்சி பத்து உயர் லாரிகள் மூலம் கட்டுமான கட்டங்களுக்கு தண்ணீரை விற்பனை செய்கிறது என்றும் நிலத்தடி நீரை எடுப்பதற்கு பேரூராட்சியிடமிருந்து முறையான அனுமதி பெறவில்லை என்றும் நிலத்தடி நீரை வணிக நோக்கில் உறிஞ்சி பெரிய டாங்கர் லாரிகளில் விற்பதாகவும் மனுதாரர் தெரிவித்துள்ளார். மேலும் இராட்சத போர்வெல் அமைத்து நிலத்தடி நீர் உறிஞ்சப்பட்டும் தனியார் நிறுவனத்தின் மீது பேரூராட்சியால் எவ்விதமான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார். பேரூராட்சி செயல் அலுவலர் தனது அறிக்கை மற்றும் வாக்குமூலத்தில் விநாயகா வாட்டர் சப்ளை நிறுவனத்திற்கு தரைத்தளத்திற்கு மட்டும் விரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது. முதல் தளத்திற்கு கட்டிட அனுமதி பெறப்படவில்லை. 2022–23ம் ஆண்டு சொத்துவரி சீராய்வு கணக்கெடுப்பின்படி முதல்மாடி வரி நிர்ணயம் செய்யப்பட வேண்டும் என நோட்டீஸ் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், கூடுதல் கட்டிடத்திற்கு வணிக ரீதியாக இருப்பதால், சம்பந்தப்பட்ட நிறுவனம் அதாவது நகர் ஊரமைப்பு இயக்குநரின் அனுமதி பெற்று பிறகு பழைய தேதியில் இருந்து வரி நிர்ணயம் செய்யப்படும் என தெரிவித்துள்ளார்.

**ஆய்வுக்குப் பின்னர் மனுதாரரின் மனு, வாக்குமூலம் பரவை பேரூராட்சியின் செயல் அலுவலர் ஆகியோரின் அறிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன.**

பரவை பேரூராட்சியில் இயங்கிவரும் ஸ்ரீவிநாயகா வாட்டர் சப்ளையர்ஸ் என்கின்ற நிறுவனம் இயங்கி வரும் கட்டடம் முறையான அனுமதியின்றி கட்டப்பட்டுள்ளதை பேரூராட்சியினர் கண்டும் காணாமலும் இருந்துள்ளது தெளிவாகத் தெரிகிறது. இச்செயல் வன்மையாக கண்டிக்கத்தக்கது. இதற்கு பொறுப்பான செயல் அலுவலர்கள் மற்றும் சம்பந்தப்பட்டஅலுவலர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பேரூராட்சிகளின் ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

மேலும் உடனடியாக தணிக்கை செய்து கட்டிட வரைபட அங்கீகரிக்கப்பட்ட அறைகள் சரிவர உள்ளதா என்று ஆராயவும் விதிமீறல்களை அகற்ற குறிப்பிட்ட தாக்கீதுகள் வழங்கி

தமிழ்நாடு நகர்ப்புறம் மற்றும் திட்டமிடல் துறைச் சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்க பகுதி உதவி இயக்குநர் மற்றும் செயல் அலுவலர் அறிவுறுத்தப்படுகின்றனர். இதனைச் செயல்படுத்துவதில் உரிய மேற்பார்வை நடவடிக்கை எடுக்க பேரூராட்சிகளின் இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

மேலும் தரை தளத்திற்கு மட்டும் 2017–18ல் சொத்து வரி விதிப்பு செய்திருந்தும் அதற்கான வரியை வசூலிக்காததும், முதல்மாடிக்கான வரி நிர்ணயம் இதுவரை செய்யப்படவில்லை என்று செயல் அலுவலர் தெரிவித்துள்ளார். இது பரவை பேரூராட்சியின் நிர்வாக அவலத்தை காட்டுகிறது. மேலும் அந்நிறுவனத்தில் பணியாற்றிய பணியாளர்களுக்கான தொழில் வரியும் பேரூராட்சியில் இதுவரை பெறப்படவில்லை எனக் கூறுவது கண்டனத்துக்குரியது.

எனவே மேற்படி விநாயகா வாட்டர் சப்ளை நிறுவனத்திடமிருந்து முறையாக சொத்துவரி, தொழில் வரி ஆகியவற்றை வசூலிக்காத சம்பந்தப்பட்ட அனைத்து அலுவலர்கள், பேரூராட்சியின் முன்னாள் மற்றும் இந்நாள் செயல் அலுவலர் மீதும் ஒழுங்கு நடவடிக்கை எடுத்திடவும் மேற்படி நிறுவனத்திடமிருந்து சொத்துவரி மற்றும் தொழில் வரியை முன்தேதியை கணக்கிட்டு வசூலிக்க நடவடிக்கை எடுக்கவும் செயல் அலுவலர் அறிவுறுத்தப்படுகிறார்.

ஸ்ரீ விநாயகா வாட்டர் சப்ளை என்ற நிறுவனத்திற்கு இப்பேரூராட்சியில் கட்டிட வரைபட அனுமதி தரைத்தளத்திற்கு மட்டும் பெற்றுள்ளார். கட்டிட வரைபட எண். 6/2016–17 நாள் 18.04.2016 ஆகும். இவருக்கு 2017–18ல் சொத்துவரி வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது. வரிவிதிப்பு எண். 2870 கதவு எண். 13.1.66 மெயின் ரோடு. இந்த முகவரியில் ஸ்ரீ விநாயகா வாட்டர் சப்ளை தொழில் செய்து வருகிறார். இது சம்பந்தமாக 13.08.2020ல் பொதுப்பணித்துறையின் மூலம் கடித எண்.டிடி(ஜி)ஒடி 10/ஜி 6/222/ Fresh Noc- Madurai/ 2020 நாள் 13.08.2020 அனுமதி பெற்றுள்ளார் என பேரூராட்சியின் செயல் அலுவலர் இம்முறைமன்றத்தில் தெரிவித்துள்ளார். ஆனால் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களை சரிபார்த்ததில் மேற்கண்ட நிறுவனத்திலிருந்து சுமார் 10 கி.மீ. தூரத்தில் உள்ள வேறோரு நிறுவனத்திற்கு அளித்துள்ள சான்றாகும். வேறோரு இடத்திற்காக வழங்கப்பட்ட சான்றினை புகாரில் தெரிவித்துள்ள நிறுவனத்திற்கான சான்றாக செயல் அலுவலர் கூறியுள்ளது திசை திருப்பும் செயல் ஆகும். இது வன்மையாக கண்டிக்கதக்கது.

மேற்கண்ட விநாயகா வாட்டர் சப்ளையர் பரவை பேரூராட்சியிடமிருந்து முறைப்படி உரிமம் பெற்றுள்ளதா என்பது குறித்தான விபரத்தை பேரூராட்சி செயல் அலுவலர் உடனடியாக இம்முறைமன்றத்திற்கு அனுப்பி வைக்க அறிவுறுத்தப்படுகிறார்.

பொதுபணித்துறையின் நீர்ஆதாரத்துறையிடமிருந்து மேற்கண்ட விநாயகா வாட்டர் சப்ளையர் நிறுவனத்தை நடத்திட அந்நிறுவனம் முறையான உரிமம் பெற்றுள்ளதா என்பது குறித்து தலைமை பொறியாளர் பொதுப்பணித்துறை இம்முறைமன்றத்திற்கு தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார். இது குறித்து கள ஆய்வு செய்து உண்மைத்தன்மையை உறுதிபடுத்துமாறு தலைமைப்பொறியாளர் அறிவுறுத்தப்படுகிறார்.

இராட்சதமின்மோட்டர் மூலம் தனியார்கள் நிலத்தடி நீரை வணிக நோக்கில் எடுத்து அதனை வியாபாரமாக செய்வதால் நிலத்தடி நீர் குறைந்து அப்பகுதியில் இருக்கும் கிணறுகள் வற்றுவதற்கு வாய்ப்புண்டு. மேலும் அப்பகுதி மக்கள் பாசனத்திற்கோ அல்லது வீடுகளின் தேவைகளுக்கோ குடிநீர் ஆதாரமாக கிணறுகளை நம்பி வாழ்வதால் அங்குள்ள விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்படுவர். எனவே நீர் வள மேலாண்மைத்துறை இந்நேர்வில் தனிகவனம் செலுத்தி பரவை பேரூராட்சியில் மேற்கண்ட வாட்டர் சப்ளை நிறுவனம் போன்று எத்தனை நிறுவனங்கள் இயங்கி வருகின்றன என்பது குறித்தும், அவற்றில் எத்தனை நிறுவனங்கள் முறையாக அனுமதி பெற்றுள்ளன எனவும், நிலத்தடி நீரை எடுப்பதில் எந்தெந்த

நிறுவனங்கள் தங்களது வரம்பை மீறி செயல்படுகின்றன என்பது குறித்தும் ஆய்வு செய்திடவும் நீர்வள மேலாண்மைத்துறை தலைமைப் பொறியாளர்/ கண்காணிப்புப் பொறியாளரை இம்முறைமன்றம் கேட்டுக்கொள்கிறது.

The Director of Town Panchayats is instructed to get the water Supplier Building inspected by a competent Engineer with reference to the building plan approval and verify whether violations have been committed. If irregularities are detected stringent action against the company as well as the Paravai Town panchayat officials concerned who had colluded with such violations and defaulted in taking action as per rules in force and vogue, should be taken promptly. An action taken report may be sent to this Forum in 45 days.

2022-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 6-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.**

பெறுநர்

1. திரு.R.மயில்சாமி,த/பெ. இராமலிங்கம்,
5,அய்யப்பன் தெரு,செம்பருத்தி நகர்,
புதுவிளாங்குடி,மதுரை – 625 018.
2. செயல் அலுவலர்,
பரவை தேர்வுநிலை பேரூராட்சி, மதுரை மாவட்டம்.
3. பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், மதுரை மாவட்டம்.
4. பேரூராட்சிகளின் ஆணையாளர்,
பேரூராட்சிகளின் ஆணையரகம்,
நகர் நிர்வாக அலுவலகம், ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி நகர்,
சென்னை–600 028.
5. இணை இயக்குநர் (பொது) மற்றும்
ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
பேரூராட்சிகளின் ஆணையாளர் அலுவலகம்,
நகர் நிர்வாக அலுவலகம், இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை–600 028. (பெயரிடப்பட்ட உறையில்)
6. தலைமைப் பொறியாளர், நீர்வளத்துறை,
மதுரை
7. கண்காணிப்புப் பொறியாளர், நீர்வளத்துறை,
மதுரை

நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்.
இ.கோ/உதிரி

//ஆணைப்படி/ அனுப்பப்படுகிறது//

செயலாளருக்காக.